[21st November 1963

திரு. மா. இ. ராசாங்கம் : தலைவர் அவர்களே, பாடுபட்டு பாரதத்திற்கு சுதந்திரம் தேடித்தந்த விடுதலை வீரர்களிலே முன்னணியில் நிற்கத்தக்க பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களுக்கு ஒரு நினைவுச் சின்னம் வைக்க லட்சக்கணக்கான மக்கள் . . . .

MR. SPEAKER : The question does not arise.

திரு. எஸ். முருகையன் : திருவண்ணாமலையில் அண்ணாமலைப் பிள்ளையின் உருவச் சிலையை வைப்பது குறித்து, அந்த நகரசபை தீர்மானம் போட்டு சர்க்காருக்கு அனுப்பியிருந்தும் சர்க்காரிலிருந்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை. அது சம்பந்தமாக உடனடியாக நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : அந்தக் கேள்வி என் சகா ஸ்தல ஸ்தாபன அமைச்சருக்குப் போட வேண்டும்.

Paramakudi Panchayat

* 385 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the details of the scheme submitted by the Paramakudi Panchayat for the improvement of the drainage in Paramakudi Town;

(b) the amount of loan or grant requested for by the Panchayat from the Government; and

(c) the decision of the Government on this proposal?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) பரமக்குடி பஞ்சாயத்துப் பகுதியில் பாதாளக் கழிவு நீர்க்கால் கட்டும் திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கடந்த மே மாதத்தில் அந்தப் பஞ்சாயத்துத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

(இ) கடனோ மானியமோ கேட்கப்படவில்லை.

(உ) மூன்றாவது திட்ட வேலைகளில் அடங்காத புதிய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு ஆகும் முழுச் செலவும் சம்பந்தப்பட்ட ஸ்தல ஸ்தாபனமே ஏற்றுக்கொள்வதாயிருந்தால் அதை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று பஞ்சாயத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

கொள்ளை (சேலம் மாவட்டம்)

* 386 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேட்டூர்--காவேரிபுரம் பகுதிகளில் "மம்மட்டியான்" என்ற கொள்ளைக்காரனால் பொதுமக்களுக்கு தொல்லைகள் ஏற்பட்டது சர்க்காருக்குத் தெரியுமா ?

(இ) எத்தனைக் குற்றங்கள் அரசாங்கத்தின் பார்வைக்கு வந்தன ?

21st November 1963]

(உ) அவைகளின்மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டது ?

(எ) அந்த நபரை பிடிக்க அரசாங்கம் முயற்சி செய்ததா ? விவரமென்ன ?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) (எ) இது குறித்து அறிக்கை[a] ஒன்று சபையில் வைக்கப்பட்டுள்ளது.

Transport Commissioner.

* 387 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to appoint a separate Transport Commissioner in the place of a Board Member?

THE HON. SRI R. VENKATARAMAN : No.

Collection of Motor Vehicles Tax

* 388 *Q*.—SRI S. MADHAVAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Government have appointed additional staff in the Transport Department subsequent to the recent enhancement of Motor Vehicles Tax in 1962; for the collection of arrears of tax;

(*b*) the number and category of such posts;

(*c*) the amount spent on the additional establishment up to December 1962; and

(*d*) the number of cases detected in the year 1962 and the amount realised in those cases?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) Yes.

(*b*) A statement [b] is placed on the Table of the House.

(*c*) Rs. 19,898–53 nP.

(*d*) 271 cases involving a sum of Rs. 57,703–96 nP.

திரு. செ. மாதவன் : சார், இந்த வகையில் செலவழித்த தொகைக்கும் கண்டு பிடிக்கப்பட்ட தொகைக்கும் வேறுபாடாக இருப்பதற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : விசேஷ அதிகாரிகள் போட்டு அண்டர் பேமண்ட் இருந்தாலும் டாக்ஸ் கொடுக்காமல் இருந்தாலும் கண்டு பிடிக்கப்படுகின்றன. இந்தக் குறுகிய காலத்திலேயே ரூ. 57,000 வருமானம் என்று சொன்னேன். வருஷங்கள் போகப்போகத்தான் அது எவ்வளவு என்று பார்க்க முடியும்.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதைப் பர்மனென்ட் ஸ்டாஃபாக மாற்றிவிட்டார்களா ? அல்லது அப்படிச் செய்ய உத்தேசமாவது உண்டா ?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : அதைப்பற்றி இப்போது ஒன்றும் முடிவு எடுக்கவில்லை.

[a] Printed as Appendix II on page 528.
[b] Printed as Appendix III on page 529.